சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08.

ந.க.எண்.2792/ஆ6/2022 நாள்.13.05.2022

-----

பொருள் பள்ளிக் கல்வி – கோடை விடுமுறை மற்றும் ஆசிரியர்களுக்கான அறிவுரைகள் – தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவித்தல் – தொடர்பாக.

-----

மேற்காண் பொருள் சார்ந்து, கீழ்கண்ட அறிவுரைகள் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

1. அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் சுயநிதிப் பள்ளிகளில் 1 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு இன்றுடன் (13.05.2022) தேர்வுகள் நிறைவடைவதால் நாளை (14.05.2022) முதல் மாணவர்களுக்கு கோடை விடுமுறை அளிக்கப்படுகிறது.
2. அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் / சுயநிதிப் பள்ளிகளில் விடைத்தாட்கள் திருத்துதல், 1 முதல் 9 ஆம் வகுப்புகளுக்கு ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் தயாரித்தல் (தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் தயார் செய்தல் வேண்டும்) மற்றும் தேர்ச்சியறிக்கை பதிவேடு தயாரித்தல் போன்ற பணிகளை முடித்திட ஏதுவாக பள்ளி ஆசிரியர்கள் 20.05.2022 வரை பள்ளிக்கு வருகைபுரிய வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
3. அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் / சுயநிதி தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்த வரை பள்ளி மாணவர்கள் / ஆசிரியர்களின் வருகைப் பதிவு விவரம் EMIS இணையத்தில் உள்ள பதிவுகளுடன் ஒத்திருப்பதை சரிப்பார்க்க வேண்டும். இரண்டு பதிவுகளும் வேறுபடும் பட்சத்தில் அவற்றை சரி செய்ய வேண்டும். மேலும் அவை இரண்டும் சரியாக உள்ளது என்பதற்கான சான்றினை பள்ளித் தலைமையாசிரியர் அந்தந்த வட்டாரக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
4. அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் / சுயநிதி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் மேற்காண் பணியினை முடித்திடவும், தேர்வுப் பணியில் உள்ள ஆசிரியர்கள் தேர்வுப் பணி முடிந்தவுடன் இப்பணியை மேற்கொள்ளலாம். 20.05.2022-க்குள் இப்பணியை முடித்திட தெரிவிக்கப்படுகிறது.

5. மேலும், நாளை 14.05.2022 சனிக்கிழமை பள்ளிகளுக்கு விடுமுறையாகும்.

மேற்கண்ட விவரங்களின்படி தங்கள் பள்ளியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை செய்திடுமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை.

பெறுநர்

1. அனைத்து வகைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள், சென்னை மாவட்டம்.
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
4. சென்னை-03, சென்னை மாநகராட்சி, கல்வி அலுவலர் தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.